https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிவவாக்கியர் பாடல்களில் பகுத்தறிவு சிந்தனைகள்

**வீ. சந்திரசேகர்**
முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத்துறை, திராவிடப் பல்கலைக்கழகம்

**முனைவர் வ. கலையரசி**
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
பதிப்புத்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரபிரதேசம்

## முன்னுரை

இந்திய சிந்தனை மரபில் பகுத்தறிவு குறித்த வாதங்களும் விவாதங்களும் தத்துவ தளத்தில் மிகத் தீவிரமாக இருந்து வந்திருக்கின்றன. பல்வேறு தத்துவ மரபுகள் ஒன்றோடொன்று இயைந்தும் ஒன்றையொன்று மறுத்தும் மேற்கொண்ட உரையாடல்களில் இப்பகுத்தறிவு வாதத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன. நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்ஸை, வேதாந்தம் ஆகிய ஆறு பிரிவுகளில் பெரும்பான்மை பகுத்தறிவு சிந்தனைகளை மையப்படுத்தி உருவானவையே ஆகும். ஆன்மீகத்தையும் உடல்சார் அறிவியலையும் ஒன்றிணைத்து யோக தத்துவம் உருவானதைப் போலவே தமிழகத்தில் யோகத்தையும், அறிவியலையும் ஆன்மிகத்தோடு இணைத்து உருவானதே சித்தர் மரபாகும்.

நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம் ஆகிய தத்துவக் கருத்துக்களின் தாக்கங்களைச் சித்தர் மரபில் காண முடிகிறது. குறிப்பாகச் சிவவாக்கியர் பாடல்களில் பகுத்தறிவு சிந்தனைகள் அதிகம் காணப்படுகின்றன. பதினெண் சித்தர்களில் சிவவாக்கியர் சிறப்பிடம் பெறுகிறார். சமூகமேம்பாட்டுக் கருத்துக்களும் தனிமனித வாழ்க்கை மற்றும் ஆன்ம ஈடேற்றத்திற்குகந்த தத்துவநெறிகளைத் தம் பாடல்களில் மிக எளிமையான நடையில் எடுத்துரைக்கின்றார். பெரியார் கூறிய பகுத்தறிவுக் கருத்துக்களை ஒத்த சிந்தனைகள் இவருடைய பாடல்களில் இடம்பெற்றிருப்பதைக் காண முடிகின்றது. இக்கட்டுரை சிவவாக்கியர் பாடல்களில் இடம்பெறும் பகுத்தறிவுக் கருத்துக்களை ஆராய்ந்து விளக்குவதாக அமைந்துள்ளது.

## பகுத்தறிவு விளக்கம்

எந்த ஒன்றையும் பகுத்து ஆராய்ந்து தெளிந்து அறிவுக்குப் பொருந்த விளங்கிக் கொள்வதையே பகுத்தறிவு என்கிறோம். நன்மை, தீமைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும் திறனுக்குக் காரணமாக அமைவது பகுத்தறிவாகும். அறிவை அறிவதற்கான முறைகளாக இந்திய தத்துவத்தில் ஆறு பிரமாணங்கள் கூறப்படுகின்றன. பிரத்யட்சம், அனுமானம், ஆப்தவாசன், அருத்தாபத்தி, உவமானம் எனும் ஆறும் தர்க்கரீதியான அறிதலை வலுப்படுத்தும் வழிமுறைகளாக இந்திய தத்துவமரபு கூறுகிறது. இதில் முதல் மூன்றும் மிக முக்கியமான பிரமாணங்களாகும். ஐம்புலன்களைக் கருவியாக கொண்டு அறியும் அறிவு

பிரத்தியச பிரமாணம் ஆகும். காணப்படும் பொருளைக் கொண்டு காணப்படாத பொருளை அனுமானத்தால் அறிதல் அனுமானப் பிரமாணம் ஆகும். அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் அறியப்படும் அறிவு ஆகம ஞானம் அல்லது ஆப்த வாசன் (முன்னோர் உரை) ஆகும்.

### பகுத்தறிவு பற்றி திருவள்ளுவரின் கருத்து

தமிழ் மெய்ஞ்ஞானியாகிய திருவள்ளுவர், பகுத்தறிவுக்கு விளக்கமாகப் பலவற்றைக் கூறியுள்ளார். வெறும் புறத்தோற்றத்தினை மட்டுமே கருத்தில் கொண்டு பொருளின் இயல்பினை அறிந்து கொள்ள முடியாது. சிலசமயங்களில் காரிய பொருள் மெய்யாகத் தோன்றும். அதனின்று வெளிப்படும் காரணப் பொருள் வேறு ஒன்றாக மாறி விடுவதும் திரிபுபடுதலும் உண்டு. எனவே இதனைப் பகுத்தறிந்து தீவிர ஆராய்ச்சி யினால் அறிந்து முடிவு காண்பதுதான் சிறந்ததாக இருக்கும் என்பதனை,

”எப்பொருள் எத்தமைத்து ஆயினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு”

(குறள்–355)

எனும் குறட்பா மூலம் தெளிவுப்படுத்து கின்றார். அதேபோல ஒருவர் ஒரு கருத்தைக் கூறிவிட்டார் என்பதற்காக அவரின் சமூகத் தகுதியைக் கருதி அப்படியே ஏற்றுக்கொள் வதும் சமூக தாழ்வைக் கருதி ஒதுக்கித் தள்ளுவதும் அறிவுடைமை ஆகாது. தீர ஆராய்ந்து அவர் உரையின் உண்மைப் பொருளை அறிய முற்பட வேண்டும் என்பதனை,

”எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு”

(குறள்–423)

என்கிறார். இக்கருத்துக்கள் தமிழ்மரபின் மிகநீண்ட பகுத்தறிவுப் பாரம்பரியத்தை எடுத்தியம்புவதாக உள்ளது.

### பெரியாரின் பகுத்தறிவு பார்வை

தமிழ் மரபில் சங்ககாலம் தொட்டு இலக்கியங்களில் பகுத்தறிவு கருத்துக்கள் விரவிக்கிடந்தாலும் பரவலாகப் பேசப் பட்டது பெரியாருக்குப் பிறகுதான் என்றால் மிகையாகாது. தந்தை பெரியார் தாம் வாழும் காலத்திலும்சரி தனக்குப் பிறகும்சரி, பகுத்தறிவு பாதையை உருவாக்கி அதில் தமிழ்ச் சமூகத்தை நடைபயிலச் செய்தவர். தம், அறிவுக்கு எது சரி என்று படுகிறதோ அதை மட்டுமே தன் இறுதி மூச்சுவரைப் பேசியவர். இத்தகைய பகுத்தறிவுப் பகலவனான ஈ.வெ.ரா அவர்கள்,

”பகுத்தறிவு என்பது யாவற்றையும் விட மேலானது. சிந்தித்தும் ஆழ்ந்து யோசித்தும், ஆராய்ந்தும், அனுபவத்தை ஒட்டியும், சூழ்நிலைக்கேற்ற வண்ணமும் அப்போதை க்கு அப்போது தன் வாழ்க்கையின் நிலையை மாற்றி அமைத்துக் கொள்வதும், நலனுக் கேற்றவாறு ஒவ்வொரு புதிய சாதனங் களையும் அமைத்துக் கொள்வதும் இதன் சம்பந்தப்பட்டதாகும்” **(நன்னன். மா., 2008)** என்று கூறுகிறார். இதில் அவர் பகுத்தறிவுக்குத் தரும் முக்கியத்துவத்தையும் மானுட நலனுக்கான அடிப்படைக் கொள்கையாகப் பகுத்தறிவைக் கருதியதையும் உணர முடிகிறது.

### சிவவாக்கியர் பாடல்களில் பகுத்தறிவு

சித்தர்களின் மிகவும் குறிப்பிடத் தகுந்தவர் சிவவாக்கியர் ஆவார். இவருடைய பாடல்கள் பெரிய ஞானக்கோவையில் இடம் பெற்றிருக்கிறது. எளிய நடையும், சந்த நயமும் கைவரப்பெற்றவர். மனித அறியா மைகளுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிராகக் கலகக் குரல் எழுப்பியவர். உருவவழிபாட்டு மறுப்பு, சாதி மறுப்பு, நிலையாமை, வைதீக மறுப்பு போன்றவை இவருடைய பாடல்களில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன.

### சிவவாக்கியர் பாடல்களில் சாதி மறுப்பு சிந்தனைகள்

தமிழ்ச் சமூகத்தில் வைதீகத்தின் செல்வாக் கால் வேரூன்றிய நால்வர்ண கோட்பாடும் அதன் விளைவாக ஏற்பட்ட சாதிய ஏற்றத் தாழ்வுகளும் மிகப்பெரும் சமூகத் தடைகளாக இன்றளவும் நிலைத்து வருகின்றது. தந்தை பெரியார் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் இச்சாதிய ஏற்றத்தாழ்வுகளை அகற்றக் கடுமையாகப் பாடுபட்டார். கலப்பு மணத்தை ஆதரித்தல், சாதி மறுப்பு, கோயில் நுழைவுப் போராட்டம், இட ஒதுக்கீடு என சமூகத் தளத்திலும் அரசியல் மட்டத்திலும்

அயராது உழைத்தார். இத்தகைய சமத்துவ சமுதாயத்தைக் காண விழையும் கருத்துக்கள் பெரியாருக்கு முன்பாகவே சித்தர் இலக்கியங்களில் தென்படுகிறது. குறிப்பாகச் சிவவாக்கியர் பாடல்களில் சாதிக்கு எதிரான கடுமையான கண்டனங்கள் பதிவாகியுள்ளன.

"பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா

இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ

பறைச்சிபோகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ

பறைச்சியும் பணத்தியும் பகுத்து பாரு உம்முள்ளே" (சிவ.வ.பா.37)

என மானுட சமத்துவத்தைப் பறைசாற்றிச் சாதியத்தை ஆதரிக்கும் மூடர்களை நோக்கிக் கேள்வி எழுப்புகிறார்.

### சிவவாக்கியர் பாடல்களில் தீட்டுக்கு எதிரான குரல்

தமிழ்ச் சமூகத்தில் சாதியத்தைப் போன்றே பெண்ணடிமைத்தனமும் சமூக வளர்ச்சிக்கு பெருந்தடையாக இருக்கிறது. ஆணாதிக்கத்தால் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுவதுடன், சமய ரீதியிலும் பெண் என்பவள் தீட்டுக்குரியவளாக ஒதுக்கி ஓரங்கட்டப்படுகிறாள். பெண்கள் மாதவிடாய் நாட்களில் கோயிலுக்குச் செல்லக்கூடாது, வீட்டுப் பொருட்களைத் தொடக்கூடாது என இச்சமூகம் அவர்களை விலக்கி வைத்திருக்கின்றது. சங்க இலக்கியங்களில் இவர்கள் "கலந்தொடா மகளிர்" என குறிப்பிடப்பட்டுள்ளனர். வைதீகர்களின் வருகைக்குப் பிறகு தமிழ்ச் சமூகத்தில் பெண்களுக்கு இத்தகைய இழிநிலை உருவாகியிருக்கிறது. இதனைச் சிவவாக்கியர் கடுமையாகச் சாடுகின்றார்.

"மாத மாதம் தூமை தான் மறந்து போன தூமைதான்

மாதமற்று நின்றலோ வளர்ந்து ரூபமானது

நாதமேது வேதமேது நாற்குலங்கள் ஏதடா

வேதம் மோதும் வேதியா விளைந்தவாறும் பேசடா" (சிவ.வ.பா.126)

என்று கர்ப்பத்தில் பத்து மாதத் தூமையால் உருவாகி வந்த மனித இனத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பது ஏது? என வினவுகிறார். இவ்வுலகத்தில் ஆணும் பெண்ணும் தூமையினால் தான் உருவாகின்றனர். அப்படி இருக்க தூமை தீட்டுக்குரியதா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றார். ஏனைய சித்தர்களைப் போல பெண் வெறுப்பு என்பது சிவவாக்கியர் பாடல்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சிவவாக்கியர் பாடல்களில் உருவ வழிபாட்டு மறுப்பு

சித்தர்கள் கோயில் கலாச்சாரத்தையும் உருவ வழிபாட்டையும் கடுமையாக எதிர்த்தனர். வெட்ட வெளியில் இறைவனைக் கண்டவர்கள். "உள்ளம் பெருங்கோயில் உன் உடம்பு ஆலயம்" என உடம்பையும், உள்ளத்தையும் இறைவன் உறையும் ஆலயமாகக் கருதினர். மனிதத்தை மையப்படுத்தியதாகவே அவர்களின் இறை கோட்பாடு அமைந்திருப்பதைப் பல்வேறு பாடல்களில் காணலாம். கோயிலுக்குச் சென்று வணங்குவதாலும் அது சார்ந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் செய்வதாலும் மட்டும் இறைவனை அடைய முடியாது என்பதில் உறுதி உடையவர்கள். இறைவணக்கத்தில் சாதாரண மக்களிடம் காணப்பட்ட மூடநம்பிக்கைகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் உண்மையான இறைவழிபாட்டிற்கு எதிரானதாகக் கருதினர். இதனை சிவவாக்கியர்,

"கோயில் பள்ளி ஏதடா குறித்து நின்ற தேதடா

வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா

ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்

காயமான பள்ளியில் காணலாம் இறையையே" (சிவ.வ.பா.173)

என்ற பாடலில் கோயிலில் சென்று வழிபடுவதாலும் குளத்தில் மூழ்கி நீராடுவதாலும் இறைவனைக் காண முடியாது என்றும், இறைவனை ஞான நிலையில் உணர்ந்தால் மட்டுமே ஒவ்வொருவருக்குள்ளும் இறைவனைத் தரிசிக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பித்து, ஞானம் என்பதை ஒரு சிலருக்கானதாக மட்டுமே கூறிய வைதீக நெறிக்கு மாறாக ஞானத்தைப் பொதுநிலையில் வைத்து அனைவருக்குமானதாகப் பேசுவது சித்தர் மரபு என்பதை

இதன் மூலம் அறியலாம்.

உருவ வழிபாட்டினை மறுத்து மிக எளிமை யாகவும் எதார்த்தத்தில் காணும் உவமை மூலமும் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின் றார் சிவவாக்கியர்.

**“நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தியே**

**சுற்றி வந்து மொணமொனென்று சொல்லும் மந்திரம் ஏதடா**

**நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்**

**சுட்ட சட்டி சட்டுவோம் கறிச்சுவை அறியுமோ”** *(சிவ.வ.பா.48)*

என்று கல்வழிபாட்டை எதிர்க்கிறார். நாம் தேடும் இறைவன் கல்லில் இல்லை. மந்திரத்தாலும் பூசனையாலும் இறைவனைக் காண முடியாது. காண்பதற்கரிய கடவுள் நமக்குள்ளே இருக்கின்றான். கல்லில் தேடுவதும் பூசிப்பதும் மந்திரங்கள் சொல்லி வழிபடுவதும் வீண் வேலை என்பதை இப்பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார்.

## சிவவாக்கியர் பாடல்களில் வைதீக மறுப்பு

வைதிகத்திற்கு எதிரான குரல்கள் தொடக்க காலத்தில் இருந்தே வலுப்பெற்று வந்துள்ளன. சமய அடிப்படையில் வைதீக சமயங்களு க்கும் அவைதீக சமயங்களுக்குமான முரண் பாடு சமூகத்தளத்திலும், தத்துவ தளத்திலும், அரசியல் தளத்திலும், சமயத்தளத்திலும் மிகுதியாகக் காணப்பட்டுள்ளன. தமிழகத்தில் சங்க காலம் தொட்டு வைதிக எதிர்ப்புக் குரல்கள் காணப்பட்டாலும், சித்தர்களின் காலகட்டத்தில்தான் பெரும் கலகக் குரலாக உருவானது. தொடக்கத்தில் சமண பௌத்த மதங்கள் வைதிக எதிர்ப்பில் தீவிரமாக இருந்துள்ளன. தமிழகத்தில் பக்திஇயக்க காலத்தில் சைவ வைணவ எழுச்சியினூடாகச் சமண பௌத்தம் வீழ்ச்சி அடைந்த பிறகு வைதிகம் மேலும் செல்வாக்கடைந்து காணப் பட்டது.

இந்நிலையில் சித்தர் மரபும் அது சார்ந்த கருத்துருவாக்கமும் வைதீக மறுப்பில் மிகத் தீவிரம் காட்டியது. சிவவாக்கியர் பூஜை, உயிர்பலி, வேதமோதுதல், வேள்விச்சடங்கு, திருநீறு பூசுதல் போன்ற வைதிகச் சடங்காச்சாரங்களைத் தர்க்கப்பூர்வமாக மறுக்கின்றார்.

**“சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே**

**வேர்த்து இறைப்பு வந்த போது வேதம் வந்து உதவுமா”** *(சிவ.வ.பா.10)*

என்றும்,

**“வேதம் ஓதும் வேலையே வீணாகும் பாரிலே”** *(சிவ.வ.பா.10)*

என்றும் வேதத்தையும் பிறசாத்திரங்களையும் கடிந்துரைக்கின்றார்.

## முடிவுரை

சிவவாக்கியர் பாடல்களில் ஏனைய சித்தர் பாடல்களைக் காட்டிலும் பகுத்தறிவுக் கருத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. வைதீக மறுப்பைத் தம் பாடல்களின் மிக அழுத்தமாக பதிவு செய்துள்ளார். இறைவழி பாட்டில் நிலவும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும், தேவையற்ற சடங்கு சம்பிரதா யங்கள் மற்றும் பழக்கவழக்கங்களுக்கு எதிராகவும் குரல் எழுப்பி உள்ளார். இறைநம்பிக்கை சார்ந்த சமய நிறுவன ங்களின் பல்வேறு கருத்துகளை தகர்த்து பொதுநிலையில் எல்லோருக்குமானதான சமய கருத்துகளைக் கட்டமைத்துள்ளார் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. அருணாச்சலம்.மு., தமிழிலக்கியவரலாறு (14,15,16 ஆம்நூற்றாண்டு) மாயிரம், காந்தி வித்யாலயம், 1969.
2. ராமநாதன் அரு., சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, பிரேமா பிரசுரம், நான்காம் பதிப்பு,
3. திருவள்ளுவர், திருக்குறள், வனிதா பதிப்பகம், சென்னை.
4. நன்னன், மா., பெரியாரைக் கேளுங்கள்,9, பகுத்தறிவு, ஏகம்பதிப்பகம், சென்னை, 2008, ப.12